# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்

# Mount Druitt Tamil Study Centre


**Mobile: 0449 892 066**

**Email :mtdruitttsc@gmail.com** **Web : www.mtsc.org.au**


## செய்தி மடல் 2021 – 0 2 **08-05-2021**

**"உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்**
**வாக்கினிலே ஒளி யுண்டாகும்**
**வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்,**
**கவிப்பெருக்கும் மேவு மாயின்**
**பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்**
**விழிபெற்றுப் பதவி கொள்வார்,**
**தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்**
**இங்கமரர் சிறப்புக் கண்டார்"** என்றார் சுப்பிரமணிய பாரதியார்.

மவுண்றூயிட் தமிழ்க் கல்வி நிலையம் தமிழை மாணவர்களுக்கு கற்பிப்பது மட்டுமன்றி மாணவர்களை சிறந்த பண்பு, ஒழுக்கம், கிழ்படிவு, தன்னம்பிக்கை உள்ள சிறந்த மாணவர்களாக உருவாக்கி வருவதுடன் தற்பொழுது மாணவர்களை HSCல் தமிழை ஒரு பாடமாக எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இச்சிறப்புடைய எமது கல்வி நிலையத்தில் தமிழை கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.



1. *பேச்சுப் போட்டி - 2021*



எமது பாடசாலையின் வருடாந்த **பேச்சுப்போட்டி எதிர்வரும் 29.05.2021 சனிக்கிழமையன்று மாலை 1.00 மணி முதல் பாடசாலை மண்டபத்தில்** ஆரம்பமாகி நடைபெறும். போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் இலக்க ஒழுங்கு அன்றைய தினமே தீர்மானிக்கப்படுவதால் அனைத்து மாணவர்களும் மாலை 1.00 மணிக்கு முன்னதாக சமூகமளித்து தங்கள் அடையாள எண்ணைப் பெற்றுக்கொள்ளவும். முதலாம் தவணை முடிவில் அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் பேச்சுப்போட்டிக்கான பிரதிகளை மாணவர்களுக்கு வழங்கியுள்ளார்கள். இதுவரை அதனை பெற்றுக்கொள்ளாதவர்கள் அதனை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து பாடசாலை மாணவர்களும் பேச்சுப்போட்டியில் பங்குபற்ற வேண்டும் என்பது எமது குறிக்கோள். எனவே பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு அவற்றை மனப்பாடம் செய்வதிலும் மற்றும் அதனை திறமையாக மேடையில் பேசுவதற்கும் உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

2. *ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுத்தல்*



**பேச்சுப்போட்டி நடைபெறும் தினமான எதிர்வரும் 29.05.2021 அன்று ஆண்டு மலருக்கான நிழற்படம்** எடுக்க இருப்பதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் எமது கலாச்சார உடையணிந்து வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

3. *அரையாண்டுப் பரீட்சை*

மாணவர்களுக்கான **அரையாண்டுப் பரீட்சை எதிர்வரும் 12.06.2021** அன்று முதல் வகுப்பு ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்படும். எனவே பரீட்சை தொடர்பான விபரங்களை உங்களது பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளவும்.

4. *கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை* (Federation Exam)

**தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை எதிர்வரும் 05.06.2021 அன்று எமது பாடசாலையில் நடைபெறும்.** இப்பரீட்சைக்கான விபரங்களை எமது பாடசாலை அதிபரும் தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பின் செயலாளருமான **திரு. பால முரளீதரன்** அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

5. *அமைச்சர் விருது - 2021* (Minister Award)

இந்த வருடம் அமைச்சர் விருதுபெறுவதற்கு தகுதியான எமது பாடசாலை மாணவர்களில் தெரிவை எமது பாடசாலை அதிபர் மற்றும் கல்விக்குழுவினர் மேற்கொண்டுள்ளார்கள். தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை எமது பாடசாலை அதிபர் தொடர்பு கொள்வார் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

6. *பெற்றோர் கலந்துரையாடல்*

எதிர்வரும் **22.05.2021 சனிக்கிழமை அன்று பி.ப. 2.10 மணிக்கு** நடைபெற இருக்கும் பாடசாலை பற்றிய முக்கிய கலந்துரையாடலுக்கு சகல பெற்றோர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

7. *பாடசாலை நேரம்*

பிள்ளைகளை பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு அனுப்பிவைக்குமாறும், பாடசாலை முடிவடையும்போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | பி.ப. 3.15ல் இருந்து பி.ப. 3.30 மணி வரை |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 4.30 மணி |

8. *மாணவர் வரவு*

மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருவது அவர்களது கல்விக்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் மிகவும் முக்கியமானதாகும். அத்துடன் சமூகமொழிப் பாடசாலைகளிற்கு நியுசவுத்வேல்ஸ் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் மானியம் மாணவர்களின் வரவில் தங்கியுள்ளது. எனவே மாணவர்கள் தவறாமல் வருகைதரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

9. *பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்*




உங்கள் பிள்ளைகளுக்கான இந்த வருடத்திற்கான பாடசாலை கட்டணத்தை தவணை இரண்டு முடியும் முன் செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். எமது பாடசாலை Creative Kids Registered Provider ஆக அங்கீகாரம் பெற்றுள்ளதால் நீங்கள் Creative Kids Voucher மூலமும் எமது பாடசாலைக் கட்டணத்தை செலுத்தலாம். எனவே பெற்றோர் கொடுப்பனவை நீங்கள் பணமாக அல்லது Creative Kids Voucher மூலம் செலுத்தலாம் என்பதை உங்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்விநிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களை தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி இல : 0422 519 067)

10. *இணைய வசதியும்* IPad *மற்றும் மடிக்கணினி வசதியுமுடைய வகுப்பறை* ( *Internet, IPad and Laptop Class Room)*

எமது பாடசாலையில் உள்ள ஒவ்வொரு வகுப்பறையும் மாணவர்களின் சிறப்பான கற்றல் நடவடிக்கைகளுக்காக தற்போது இணைய வசதியும் தொடுகை உணர் திரை வசதியுமுடையதாகவும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பாவனைக்காக IPad மற்றும் மடிக்கணினியும் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

11. *பேச்சுத் தமிழ் வகுப்பு* ( *Spoken Tamil Class)*

பேசப்படாத மொழி புவியில் நிலைத்திருப்பதில்லை. எனவே எமது பாடசாலை தமிழ் மொழியை என்றும் எம்சந்ததியினரிடம் நிலைத்திருக்க செய்வதற்கான ஒரு முயற்சியாக பேச்சுத் தமிழுக்கான ஒரு வகுப்பை ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ளது. எனவே ஆர்வமுள்ளவர்களை எமது நிர்வாக தலைவர் அல்லது அதிபரிடம் தங்களது விபரங்களை தெரிவிக்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். அதுமட்டுமன்றி உங்களுக்கு தெரிந்த ஆர்வமுடைய எவருமே இந்த வகுப்பில் இணைந்து பயன் பெறலாம் என்பதனால் அவர்களின் விபரங்களையும் நீங்கள் தெரிவிக்கலாம் என்பதையும் உங்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

12. *தமிழ் பாடசாலைக்கான போக்குவரத்து ஒழுங்கு*

எமது பாடசாலை நிர்வாகம் மாணவர்களை பாடசாலைக்கு அழைத்து வர வாகன வசதி தேவையான மாணவர்களையும் அதனை வழங்க விரும்பும் பெற்றோர்கள் அல்லது சேவையாளர்களையும் தொடர்புபடுத்தும் முகமாக ஒரு புது முயற்சியை தற்போது ஆரம்பித்துள்ளது. எனவே ஆர்வமுள்ளவர்களை எமது நிர்வாக தலைவர் அல்லது அதிபரிடம் தொடர்பு கொண்டு தங்களது விபரங்களை தெரிவிக்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். இது ஒரு இணைப்பு சேவையே என்பதுடன் பெற்றோர்களே இதற்கான கட்டணங்களுக்கு பெறுப்பு என்பதையும் உங்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

13. *இணையத் தளம்* (Webpage)/ *முகப் புத்தகம்*

எமது பாடசாலை இணையத் தளமான ***www.mtsc.org.au*** மற்றும் முகப்புத்தகம் தேவையான தகவல்ளைக் கொண்டதாக தரவேற்றப்பட்டு புதுப்பொழிவுடன் அனைவரும் பயன்பெறும் வகையில் பாடசாலையினால் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். எமது பாடசாலை முகப்புத்தக முகவரி – https://www.facebook.com/groups/374995486577634/

14. *குடும்ப குதுகல தினம்* ( *Family Fun Day)*

எமது பாடசாலையில் இந்தவருடமும் 13.03.2021 திகதியன்று கொண்டாடப்பட்ட குடும்ப குதுகல தினம் சிறப்புற நடைபெற பூரண ஒத்துழைப்பை வழங்கிய மாணவர்கள், பெற்றேர்கள், ஆசிரியர்கள் மற்றும் எமது செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

15. *பாடசாலையில் மாணவர்களின் ஒழுங்கு முறைகள்*

- வகுப்பறையில் அமைதியாக இருந்து ஏனைய மாணவர்களை குழப்பாமல் ஆசிரியரின் சொல்லுக்கு கீழ்படிந்து நடந்து கொள்ள வேண்டும்.
- உங்கள் ஆசிரியர் வகுப்பறைக்குச் சென்றதன் பின்புதான் மாணவர்கள் வகுப்பறைக்கு செல்ல வேண்டும். அத்துடன் வகுப்பு முடிந்ததும் வகுப்பறையை பாடசாலை ஆரம்பிக்க முன்பு இருந்த ஒழுங்கு முறைக்கு ஏற்ப ஆசிரியருடன் சேர்ந்து ஒழுங்குபடுத்திய பின்பு தான் வெளியேற வேண்டும்.
- வகுப்பறை பொருட்களை சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தாமலும் வகுப்பறையில் உள்ள உடமைகளை சேதப்படுத்தாமலும் இருக்க வேண்டும்.
- வகுப்பறையில் மாணவர்கள் சக மாணவர்களின் பொருள்களை அனுமதி இல்லாமல் எடுத்தல் அல்லது ஒளித்து விளையாடுதல் போன்றவற்றை தவிர்த்தல் வேண்டும்.
- வகுப்பறையில் மாணவர்கள் தொலைபேசியையோ அல்லது ஏனைய இலத்திரனியல் உபகரணங்களையோ (IPad, Tablet, Nintendo, etc ) பாவிப்பதை கட்டாயமாக தவிர்க்க வேண்டும்.
- வகுப்பு இடைவேளையின் போது வழங்கப்படும் குளிர்பானம், தேநீர் மற்றும் சிற்றூண்டிகளை வரிசையில் வந்து பெற்றுக்கொள்வதுடன் அவற்றை வகுப்பறைக்கு கொண்டு செல்வதை தவிர்க்க வேண்டும்.
- இடைவேளை நிறைவடைந்து வகுப்பறை செல்லுமுன் உங்களிடம் எஞ்சியுள்ள உணவுப்பண்டங்களையும், குளிர்பானம் அருந்திய வெற்று குவளைகளையும் மற்றும் குப்பைகளையும் தவறாமல் குப்பை தொட்டியில் போடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*16. மாணவர்கள் தமிழைக் கற்பதில் பெற்றோர்களின் ஈடுபாடு*

ஆசிரியர்கள் தமிழைக் கற்பித்தாலும் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளின் பிரதான கல்வியாளர்கள். எனவே பாடசாலைக்கும் வீட்டிற்கும் இடையிலான கூட்டு முயற்சியினாலேயே குழந்தையின் தமிழ் மொழி அறிவு வளரும் என்பதால் தமிழ் மொழி கற்பித்தல் பணியில் ஈடுபட பெற்றோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அதாவது:
- தமிழில் குழந்தைகளுடன் முடிந்தவரை பேசுவது
- வீட்டுப்பாடம் மற்றும் பிற பாடசாலை நடவடிக்கைகள் மூலம் குழந்தைகளுக்கு வழிகாட்டுதல்
- குழந்தைகளின் முன்னேற்றம் குறித்து அதிபருடன் அல்லது வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுவது
- பாடசாலை ஏற்பாடு செய்த சிறப்பு விழாக்களில் கலந்துகொள்வது
- பாடசாலை நடவடிக்கைகளில் பங்கேற்பது
- பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுவது

*17. பாடசாலைவிடுமுறை*

எமது பாடசாலையின் **தவணை இரண்டு எதிர்வரும் 26.06.2021** அன்றுடன் முடிவடைந்து **மூன்றாம் தவணை வருகின்ற 17.07.2021** அன்று ஆரம்பமாகும் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.





"பொழிலிடை வண்டின் ஒலியும் – ஓடைப்
புனலிடை வாய்க்கும் கலியும்,
குழலிடை வாய்க்கும் இசையும் – வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்,
குழவிகள் மழலைப் பேச்சும் – பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்,
விழைகுவ னேனும், தமிழும் – நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர் ! " – **கவிஞர் பாரதிதாசன்**